**வளர்தமிழ் 4** **23-05-2020**

**பாடம் 07**

**சிங்கமும் முயலும் வாசிப்போம்.**

**விடை கூறுவோம்.**

1) சிங்கம் ஒன்று காட்டினிலே என்ன குணத்துடன் வாழ்ந்து வந்தது ?

2) சிங்கம் எவற்றைக் கொன்று போட்டது ?

3) சிங்கம் விலங்குகளைக் கொன்று என்ன செய்தது ?

4) கிணற்றின் உள்ளே சிங்கம் இருந்ததா ?

5) கிணற்றைச் சிங்கம் எட்டிப்பார்த்தபோது தெரிந்தது என்ன ?

(2) குறள் - அறிவுடையார் எல்லாம் _________ (பாடமாக்கவும்)

பொருள்-கல்வி அறிவுடையார் ________( பாடமாக்கவும்)

(3) பாடநூலில் உள்ள (பாடம் 7) கதையை எழுதுவோம். (30 சொற்களுக்கு குறையாமல் எழுதுவோம்.)

(4) எழுதுதல் நூல் அலகு 7, பயிற்சிகளை மீட்டல் செய்வோம்.

(5) சொற்பொருள் அறிவோம்.

1. அடக்கமாய்----------------

2. அமுது-----------------------

3. ஆவல்-----------------------

4. கோளம்-----------------------

5. நள்ளிரவு ---------------------

6. பேராவல்---------------------

7. வீரம்---------------------------

8. தீரம்----------------------------

9. படுகதி-----------------------



5) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| அல்லும்பகலும் | ஏறஇறங்க | கண்ணும்கருத்தும் |
| மேடும்பள்ளமும் | இன்பதுன்பம் | ~~சுற்றும்முற்றும்~~ |

எ+கா:-

அங்கவை காணமற்போன தன் நாய்க்குட்டியைச் சுற்றும்முற்றும் தேடினாள்.

1. பெற்றோர் தங்கள் குழந்தையில் ________________ ஆக இருப்பர்.

2. நான் பள்ளிக்குச் செல்லும் வீதி ________________ ஆகக் காணப்பட்டது.

3. மாறன் தன் குடும்பத்துக்காக ________________ வேலை செய்தான்.

4. எமது வாழ்க்கையில் ________________ மாறிமாறி வரும்.

. வகுப்புக்கு வந்த புதிய ஆசிரியரை மாணவர் ________________ ப் பார்த்தனர்.

அ. எடுத்துக்காட்டைப் பார்த்து, பொருத்தமான சொற்களைக் கண்டறிந்து எழுதுவோம்.

குயில் | அணில் | சிறுமி | குழந்தை | காய் | மழை

எ - கா: அணில் கொறித்தது

__________ கூவியது

__________ தவழ்கிறது

__________ பாடுவாள்

__________ கனிந்தது

__________ பெய்கிறது

ஆ. எடுத்துக்காட்டைப் பார்த்து, பொருத்தமான சொற்களைக் கண்டறிந்து எழுதுவோம்.

எ-கா: அவன் விளையாடுகிறான்.

நான் __________.

நீ __________.

அவர் __________.

அவன் __________.

அது __________.

பாய்கிறது | வருவாய் | விளையாடுகிறான் | வாசிக்கிறேன் | எழுதுகிறார் | சிரித்தான்

# வாசிப்போம்



## தீங்கு செய்யாதே

ஒரு சிறுவன் வெளியே விளையாடச் சென்றான். அங்கு ஒரு பெரிய மரம் ஒன்று நின்றது. அந்த மரத்தின் கிளையில் குளவிக்கூடு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. சிறுவன் குளவிக்கூட்டின் அருகே சென்றான். ஒரு கல்லை எடுத்துக் குளவிக் கூட்டுக்கு எறிந்தான். கூட்டைவிட்டுக் குளவிகள் வெளியே வந்தன. வெளியே வந்த குளவிகள் சிறுவனைக் கொட்டின சிறுவன் வலியால் அழுது கொண்டு ஓடினான். எவருக்கு நாம் தீங்கு செய்யக்கூடாது. நாம் பிறருக்குத் தீங் செய்தால் அது எமக்குத் தீங்காய் அமைந்துவிடும்.

# கோழி

- கோழியை வீட்டில் வளர்ப்பர்.
- ஆண்கோழியைச் சேவல் என்று அழைப்பர்.
- சேவல் காலையில் 'கொக்கரக்கோ' என்று கூவும்.
- பெண் கோழியைப் பேடு என்று அழைப்பர்.
- பெண் கோழி 'கொக்கொக்' என்று கொக்கரிக்கும்.
- கோழி முட்டை இட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.
- கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளால் அணைத்து வைத்திருக்கும்.
- கோழியிலிருந்து முட்டை, இறைச்சி என்பன உணவாகக் கிடைக்கின்றன.
- முட்டையில் புரத ஊட்டம் (புரதச் சத்து) அதிகம் உள்ளது.
- கோழி கூலங்கள், பூச்சிகள், புழுக்களை உணவாக உண்ணும்.
- கோழிகளைக் கரப்பால் மூடி வைப்பர்.